## டிசம்பர் - 17

**"பிரியமானவர்களே.... பயத்தோடும், நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேற பிரயாசப்படுங்கள். ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும், செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்."**

**- பிலி 2 : 12, 13.**

கிறிஸ்து இயேசுவிலிருக்கிற இரட்சிப்பை நமக்காகக் கொடுத்தவர் தேவனே. தம்மிடம் நம்மை இழுத்துக் கொண்டவரும், நீதியின் பாதையில் நடக்கவும், அதிகமாக, சுயதியாகத்தின் வழியில் இயேசுவினுடைய அடிச்சுவடுகளில் நடக்கவும் நமக்கு வேண்டிய எல்லா கிருபையையும் தர வாக்குதத்தம் செய்திருக்கிறவரும் தேவனே. ஆகையால், பயத்தோடும், நடுக்கத்தோடும், அதாவது அதிக கவனத்தோடு நாம் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படும்போது ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிற கிருபையை அடைவதும், நீதியை நடப்பிக்க நாம் எடுக்கிற நம்முடைய மிகச்சிறந்த முயற்சிகள் விசுவாசத்தினாலே நமக்குச் சாட்டப்பட்டிருக்கிற கிறிஸ்துவின் நீதியின் புண்ணியத்தின் மூலமாக அளிக்கப்படும்போது, அவைகள் தேவனுக்கு அங்கீகரிக்கப்படத்தக்கதாய் இருக்கின்றன என்று நம்பிக்கையுடனிருப்பதும் எப்பொழுதும் நம்முடைய சிலாக்கியமாயிருக்கிறது.

**- Z ’97, 147 (R 2154).**

நம்முடைய இரட்சிப்பு நிறைவேறப்பிரயாசப்படுவது, நம்முடைய பிரதிஷ்டையின் ஷரத்துக்களை நாம் நிறைவேற்றுவதைக் குறிக்கிறது. அதாவது மரணப்பரியந்தம் நம்முடைய மனுஷீகத்தின் எல்லாவற்றையும் தேவனுடைய காரியங்களுக்காக தியாகரீதியில் உபயோகப்படுத்திக் கொண்டிருக்கும்போது, சுயசித்தத்துக்கும், உலகச்சித்தத்துக்கும் செத்தவர்களாய் இருப்பதும் தேவனுடைய வார்த்தைக்கு ஒத்தாற்போல தியானத்திலும், விழித்திருப்பதிலும், ஜெபத்திலும், சாட்சியிடுவதிலும், குண அபிவிருத்தியிலும், சகிப்பதிலும், தேவனுடைய சித்தத்தில் ஜீவித்திருப்பதுமாகும். சம்பந்தப்பட்டிருக்கிற பிரச்சனைகளும், ஆட்களும், பலனும், தேவனுக்காகவுள்ள பயபக்தியை விவரிக்கிற பயத்தோடும், நடுக்கத்தோடும் இதை நாம் செய்ய கேட்கின்றன. ஏனென்றால், நம்முடைய இரட்சிப்பின் வேலையில், அதாவது, பிசாசு, உலகம், மாம்சம் இவைகளிலிருந்து விடுதலையடைவதில் தேவன் தமது ஆவியினாலும், வார்த்தையினாலும், நம்மில் கிரியை செய்கிறார். அதனால், அவரோடு நாம் ஒத்துழைக்கும் போது, தீமையை ஜெயிப்பதிலும் நன்மையை விருத்தி செய்வதிலும் நாம் சித்தங்கொள்ளவும் அவைகளை செய்யவும் அவர் நம்மை தயாரிக்கிறார். ஆகையால், எல்லா காரியங்களிலும் தேவனுக்காகவுள்ள பயபக்தியைக் குறிக்கிற அந்த பயத்தோடும் நடுக்கத்தோடும் அவரோடு ஒத்துழைப்பது நமக்குத் தகுதியாயிருக்கிறது.

**- P ’36, 166.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

யோவா 3:27; 6:27-29; எபி 4:1,11; 2கொரி 7:1; 1பேது 1:5-8; 2பேது 1:10; எபி 6:11,12; 2கொரி 3:5; எபே 2:8,9; நீதி 10:16; 16:1; எரே 32:39; எபி 13:20,21; ஏசா 26:12.

**கோபுர வாசிப்பு :** Z ’16, 55 (R 5854).

**வினாக்கள் :** எனது இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்பட்டதில் இந்த வாரத்தில் நான் எவ்வாறு கர்த்தருக்கு இசைவாக நடந்தேன்? அதில் உதவியாக இருந்ததும், இடையூறாக இருந்ததும் எவை? இந்தக் கூட்டுறவால் நான் எவ்வாறு பாதிக்கப்பட்டேன்?